# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2350/45 - 2023 සැප්තැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.09.21

*2350/45 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்***

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் (பதிற் கடமை), ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகிய நான், 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதிய 2326/ 02 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய 2312/ 67 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையை, 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதியன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில், அக்கட்டளையின் IV ஆம் அட்டவணையிலிருந்து இதனகத்தேயுள்ள அட்டவணையின் நிரல் I மற்றும் நிரல் II ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இ. மு. தலைப்புகள் மற்றும் இ. மு. குறியீடுகளுக்கு நேரெதிரே நிரல் III இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை நீக்குவதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

**ரஞ்சித் சியம்பலாபிட்டிய,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர் (பதிற் கடமை).

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, செத்தெம்பர் 21.


1A – PG 6513 – 406 (2023/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *I*<br>*இ. மு.*<br>*தலைப்பு* | *II*<br>*இ. மு.*<br>*குறியீடு* | *III*<br>*விபரம்* |
|---|---|---|
| **04.02** | | **பாலும், பாலேடும் செறிவாக்கப்பட்டவை, சீனி அல்லது பிற இனிப்புப் பொருட்கள் சேர்க்கப்பட்டவை.** |
| | 0402.10 | மாவாகவும், பால் குறுணிகளாகவும் அல்லது வேறு திண்ம நிலையாகவும் உள்ளவை, நிறையளவில் 1.5% இற்கு மேற்படாத கொழுப்பினைக் கொண்டவை. |
| | | மாவாகவும், பால் குறுணிகளாகவும் அல்லது வேறு திண்ம நிலையாகவும் உள்ளவை, நிறையளவில் 1.5% இற்கு மேற்பட்ட கொழுப்பினைக் கொண்டவை |
| | 0402.21 | சீனி அல்லது பிற இனிப்புப் பொருட்கள் சேர்க்கப்படாதவை |
| | 0402.29 | பிற |

EOG 10-0292

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.